*

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்:100

### பகுதி - I

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:–
2) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது 14x1=14

1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு
2. ஹரப்பா மக்கள் _______ பற்றி அறிந்திருக்கவில்லை.
அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்
3. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் _______ ஆகும்.
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள் இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்
4. i) பேரழகும் கலைத்திறனும் மிக்க தங்கச்சிலைகளைச் சோழர்கள் வடித்தனர்.
ii) சோழர்களின் கட்டக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு – சிவனின் மறுவடிவான நடராஜரின் பிரபஞ்ச நடனம்
அ) i) சரி ii) தவறு ஆ) i), ii) ஆகிய இரண்டும் சரி
இ) i), ii) ஆகிய இரண்டும் தவறு ஈ) i) தவறு ii) சரி
5. 'கான்டீட்' என்ற நூல் _______ எழுதப்பட்டது.
அ) வால்டேர் ஆ) ரூசோ இ) மாண்டெஸ்கியூ ஈ) டாண்டன்
6. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு
அ) புவி மேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
7. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலத்தோற்றங்களில் எது பனியாறுகளின் படிய வைத்தலால் உருவாக்கப்படவில்லை.
அ) சர்க் ஆ) மொரைன் இ) டிரம்லின் ஈ) எஸ்கர்
8. கடல் நீரோட்டங்கள் உருவாகக் காரணம்
அ) புவியின் சுழற்சி ஆ) வெப்பநிலை வேறுபாடு
இ) உவர்ப்பிய வேறுபாடு ஈ) மேற்கண்ட அனைத்தும்
9. விலை மதிப்பு மிக்க கனிமங்கள் மற்றும் பிற புவி அமைப்பியல் கனிமங்களைச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப்பது _______ ஆகும்.
அ) மீன் பிடித்தல் ஆ) மரம் வெட்டுதல் இ) சுரங்கவில் ஈ) விவசாயம்
10. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியால் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள்கள்
அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64
11. _______கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.
அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்
12. 1985 ஆம் ஆண்டு திட்டக்குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?
அ) பல்வந்ராய் மேத்தா குழு ஆ) அசோக் மேத்தா குழு
இ) GVK ராவ்மேத்தா குழு ஈ) LM சிங்வி மேத்தா குழு
13. பொருந்தாத ஒற்றை கண்டறி
அ) சூரிய ஆற்றல் ஆ) காற்று ஆற்றல் இ) காகிதம் ஈ) இயற்கை வாயு
14. தமிழகத்தின் வேளாண் உற்பத்தி திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே
அ) குறைந்துள்ளது ஆ) எதிர்மறையாக உள்ளது
இ) நிலையாக உள்ளது ஈ) அதிகரித்துள்ளது

### பகுதி - II

எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28–க்கு கட்டாய வினா 10x2=20

15. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.
16. மும்மணிகள் (திரிரத்னா) இச்சொல்லை விளக்கிக் கூறு.
17. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.

18. சிலுவைப் போர்களின் தாக்கம்.
19. பிரான்சின் மூன்று வர்க்களின் அமைப்பு பற்றி எழுதுக.
20. பசிபிக் நெருப்பு வளையம் பற்றி குறிப்பு எழுதுக.
21. உயிரினச் சிதைவு என்றால் என்ன ?
22. நீரியல் சுழற்சி என்றால் என்ன ?
23. மக்கள் அடர்த்தி என்றால் என்ன ?
24. நில வரைபடத்தின் கூறுகள் யாவை ?
25. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
26. கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை ?
27. சூரிய சக்தி என்றால் என்ன ?
28. அந்நியச் செலாவணி என்றால் என்ன ?

## பகுதி - III

10x5=50

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42–க்கு கட்டாய வினா**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    அ) மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் ______ ஆகும்.
    ஆ) ______ என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.
    இ) மிகப்பரந்த புவிச்சூழ்நிலை மண்டலத்தை ______ என்கிறோம்.
    ஈ) உலகளாவிய மனித உரிமை பிரகடனம் ______ பிரிவுகளை கொண்டது.
    உ) தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ______ பருவ மழையாகும்.
30. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். உறுதிப்படுத்துக.
31. மங்கோலியர்கள் என்பவர் யார் ? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்.
32. 1789–ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பிரெஞ்சுத் தத்துவஞானிகளின் பங்களிப்பினை விளக்குக.
33. அ) வேறுபடுத்துக:– 1) கல்விழுது மற்றும் கல்முளை 2) வானிலை மற்றும் காலநிலை
    ஆ) காரணம் கூறுக. கண்டத்திட்டுகள் சிறந்த மீன்பிடித்தளங்களாகும்.
34. புவி அமைப்பை விவரி.
35. மக்கள் தொகை பரவலைப் பாதிக்கும் காரணிகள்.
36. மக்களாட்சியில் சவால்கள் யாவை ?
37. அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன ? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய் ?
38. மேகங்களின் வகைகளை விவரி.
39. ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி.
40. பணத்தின் செயல்பாட்டினை பட்டியலிடுக.
41. புவியியல் சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.
42. **இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.**
    1) டில்லி 2) லாகூர் 3) வங்காளம் 4) தேவகிரி 5) விஜயநகர்

## பகுதி - IV

**குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2x8=16

43. அ) சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக. *(அல்லது)*

    ஆ) தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னதக் காலம் விளக்கவும்.

44. அ) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்**
    1) இமயமலைத் தொடர் 2) பசிபிக் நெருப்பு வளையம் 3) ஹீவாங்கோ டெல்டா
    4) சஹாரா வெப்பபாலைவனம் 5) தூந்திர பல்லுயிர் தொகுதி
    6) கொள்ளைநோயால் பாதிக்கப்பட்ட நாடு 7) கலிபோர்னியா நீரோட்டம்
    8) பூமத்திய ரேகை *(அல்லது)*

    ஆ) 1) ஆல்ப்ஸ் மலைத் தொடர் 2) நியூயார்க் சுண்ணாம்பு பகுதி
    3) கோபி குளிர் பாலைவனம் 4) டென்மார்க் 5) ப்ரெய்ரி
    6) குரோஷியா நீரோட்டம் 7) இந்தியப் பெருங்கடல் 8) கங்கை டெல்டா

***/***